**O.S.No. 232/2013**

**DW2 : செல்வகுமார்** தேதி 13.10.2025

பிவாசா 2 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 1,2 மற்றும் 3 பிரவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

தாவா சொத்து ஸ்ரீரங்கவுண்டருக்கு சுயசம்பாதிய சொத்து என்றால் இல்லை. அவருடைய சுயார்ஜித சொத்தை 27.6.1988 மற்றும் 22.11.1990 ஆகிய தேதிகளில் 1ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மென்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. 7 ம் பிரதிவாதிக்கு 7.12.2004 ல் 1.20 சென்டை தானசெட்டில்மென்ட் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 7.1.2008 ல் 9 ம் பிரதிவாதி ஸ்ரீராமுக்கு 3.85 ¼ சென்டை கிரையம் செய்து கொடுத்திருக்கிறார் என்றால் சரியல்ல. 24.1.2008 ல் 8 மற்றும் 9 பிரதிவாதிகளிடம் இருந்து வாதிகள் கிரையம் வாங்கியுள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்படி கிரையங்களை முரியடிக்கும் எண்ணத்தில் ஸ்ரீரங்கவுண்டரன் மகனாக 5ம் பிரதிவாதி அ வ எண்.621/91 என்ற வழக்கை பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்திருந்தார் என்றும் அந்த வழக்கில் பொது குடும்ப சொத்து என்று பாகம் கோரி இருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு மோசடியான வழக்கு என்றால் சரியல்ல. 13.7.2000 ல் பிறப்பிக்கப்பட்ட இறுதி தீர்ப்பாணை மற்றும் அதன் பெயரில் பெற்ற சுவாதீனம் ஆகியவை செல்லத்தக்கதல்ல எ்னறால் சரியல்ல. அந்த மோசடியான தீர்ப்பின் அடிப்படையில் 5 ம் பிரதிவாதி 11ம் பிரதிவாதியான தன் மனைவி பெயரில் 20.7.2011 மற்றும் 2.8.2011 ல் எழுதி வைத்த தானசெட்டில்மென்ட் செல்லாது என்றால் சரியல்ல. 24.1.2008 ல் ஸ்ரீரங்கவுண்டரன் எல்லா சொத்தையும் எழுதி வைத்து விட்டதால் அதன் பின்னிட்டு அவருக்கோ அவர் மகனுக்கோ சொத்துகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். தானசெட்டில்மென்ட் வாங்கிய 1 ம் பிரதிவாதி ஒரு

ராமலிங்கத்திற்கு கிரையம் கொடுத்து விட்டார் என்றால் சரிதான். அந்த ராமலிங்கத்திம் அவர்கள் மகன்களான ஆனந்தன் சுகுமார் ஆகியோருக்கு தானசெட்டில்மென்ட் எழுதி வைத்துவிட்டார் என்றால் சரிதான். ஆனந்தன் இடம் இருந்தான் நாங்கள் கிரையம் வாங்கியிருக்கிறோம் என்றால் சரிதான். தீர்ப்பின் அடிப்படையில் தங்கவேலுக்கு உரிமையில்லை என்றும் அவர் மனைவிக்கு எழுதி வைத்த தானசெட்டில்மென்ட்டும் மோசடியானது அதன் அடிப்படையில் ராமலிங்கம் கிரையம் பெற்றதும் மோசடியானது என்றும் ராமலிங்கம் அவர் மகன்களுக்கு எழுதி வைத்த தானசெட்டில்மென்ட் மோசடியானது என்றும் அவருடைய மகனான ஆனந்திடம் இருந்து நாங்கள் கிரையம் பெற்ற கிரைய பத்திரமும் மோசடியானது என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் தாவா சொத்தில் தொடர்ந்து சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் பொய்யான எதிர்வாதம் கொண்டு பொய்யாக வழக்காடுகிறேன் என்றால் சரியல்ல.